ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2161/18 - 2020 පෙබරවාරි මස 03 වැනි සඳුදා - 2020.02.03
*2161/18 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### துப்பாக்கிக் கட்டளைச் சட்டம்

அனுமதிப்பத்திரமின்றிய துப்பாக்கிகள் கையளிப்பதற்கான கால எல்லையினை வெளிப்படுத்தல்

*1920 இல. 06, 1945 இல. 12, 1947 இல. 07 கொண்ட கட்டளைச் சட்டம் 1955 இல. 18 மற்றும் 22, 1975 இல. 38, 1980 இல. 08, 1981 இல. 50, 1996 இல. 22 கொண்ட சட்டங்களில் திருத்தப்பட்ட (182 ஆவது அதிகாரம்) துப்பாக்கிக் கட்டளைச் சட்டத்தின் 30 (1) ஆவது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், அனுமதிப்பத்திரமின்றிய துப்பாக்கிகளை அரசிற்கு கையளிப்பதற்காக முழு நாட்டிற்கும் ஏற்புடைய வகையில் கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் படி கால எல்லையினை வெளிப்படுத்துகின்றேன்.*

மேலும் இந்த கால எல்லைக்குள் அனுமதிப்பத்திரமின்றிய துப்பாக்கிகளை கையளிக்கும் போது கையளிக்கும் திகதிக்கு முன் அத் துப்பாக்கியினை தம் வசம் வைத்திருத்தல் அல்லது பயன்படுத்தியதன் காரணமாக துப்பாக்கிக் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் சரத்திற்கு முரணான ஏதாவது குற்றத்திற்காக வழங்கப்படும் தண்டம் அல்லது தண்டனைக்கு துப்பாக்கியை கையளித்த நபரை உட்படுத்தக் கூடாது என்று கட்டளையிடுகின்றேன்.

**கோட்டாபாய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

கொழும்பு,
*2020, சனவரி 31.*

**அட்டவணை**

1. அனுமதிப்பத்திரமின்றிய துப்பாக்கிகளை கையளிக்க வேண்டிய இடங்கள்
   வசிப்பிடத்தின் பொலிஸ் அதிகாரப் பிரிவிற்குட்பட்ட பொலிஸ் நிலையம்
2. கால எல்லை
   *2020, பெப்புருவரி 05 தொடக்கம் 12 வரை*

*2-376*

1A - G 31944 — 22 (2020/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*